**(சார்பு நீதிமன்றம்), பரமத்தி**

**ஓ.எஸ்.எண்.80/2022** **நாள். 11.06.2026**

2026-ம் ஆண்டு ஜுன் திங்கள் 11-ம் நாள் வாதி தரப்பு 1ம் சாட்சியின் வாக்குமூலம் 1969ம் ஆண்டு உறுதிமொழி சட்டப்படி சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டு பதிவு செய்யப்படுகிறது.

**வா.சா.1 சீனிவாசன் த/பெ.ராசையன் (எ) மருதகண்டர்**

**பிரதிவாதி தரப்பில் குறுக்குவிசாரணை**

1) 1ம் பிரதிவாதியின் மகன் 2ம் பிரதிவாதி என்றால் சரிதான். ஐயப்பன் (எ) வீரன் என்பவரின் அப்பா பெயர் மருதகண்டர் ஆகும். மருதகண்டர் மனைவி பேச்சியம்மாள் (எ) தனலட்சுமி ஆகும். மேற்படி பேச்சியம்மாள் (எ) தனலட்சுமி உயிருடன் உள்ளார். மருதகண்டருக்கும், பேச்சியம்மாள் (எ) தனலட்சுமி விவாகரத்து எதுவும் நடக்கவில்லை என்றால், சரிதான். எனக்கு பாலாமணி (எ) நந்தினி மற்றும் ஷஜ்ஜு என்ற மக்கள் எனக்கு உள்ளார்கள். எனது அம்மாவின் பெயர் கண்ணியம்மாள் ஆகும். மேற்படி கண்ணியம்மாளின் கணவர் பெயர் சின்னையன் என்றால் சரிதான். சின்னையனுக்கு, சுந்தரவள்ளி, சுந்தரவடிவேல் என்ற இரண்டு மக்கள் என்றால் சரிதான். சின்னைக்கும், கண்ணியம்மாளுக்கும் இடையே விவாகரத்து நடந்ததா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

2) சின்னையன் மூலமாக பிறந்த மகன் தான் நான் என்றால் சரியல்ல. எனது பிறப்பு சான்றிதழ் இல்லை. நான் ஒன்பதாம் வகுப்பு வரை வேலூரில் உள்ள கந்தசாமி கண்டர் பள்ளியில் படித்துள்ளேன். மேற்படி பள்ளியில் படித்ததற்கான எனது மாற்றுச்சான்றிதழை நான் வைத்துள்ளேனா என்றால், நான் வாங்கவில்லை. நான் மருதகண்டரின் வாரிசு தான் என்பதற்கான ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், ஒப்படைக்கவில்லை. தாவா சொத்துக்கள் அனைத்தும் மருதகண்டருக்கு பொதுவாக பாத்தியப்பட்ட பொது குடும்ப சொத்துக்கள் என்றால் இல்லை. மருத கண்டர் 2009ம் ஆண்டு

இறந்துவிட்டார். மருதகண்டரின் அண்ணன் வீரப்பகண்டரும் இறந்துவிட்டார்.

3) நான் தாக்கல் செய்துள்ள தாவா சொத்துக்களின் வில்லங்க சான்று நான் பார்த்ததில்லை. வீரப்பகண்டரும், மருதகண்டரும் சேர்ந்து கிரயம் பெற்றார்கள். ஆனால் எத்தனை கிரயம் பெற்றார்கள் என்று எனக்கு தெரியாது. வீரப்பகண்டருக்கும், மருதகண்டருக்கும் பூர்வீகமாக பாத்தியப்பட்டசொத்துக்கள் 1 ஏக்கர் 30 செண்ட் இருந்தது. வீரப்பகண்டரும், மருதகண்டரும் அவர்களுக்கு பாத்தியப்பட்ட பூர்வீக சொத்துக்களையும், கிரயம் பெற்ற சொத்துக்களையும், பொறுத்து 17.09.1981ம் தேதியில் பாகப்பிரிவினை பத்திரம் மூலம் பாகம் பிரித்து கொண்டார்கள் என்றால் சரிதான். **மேற்படி பாகப்பிரிவினை பத்திரத்தின் சான்றிட்ட நகல் என்னிடம் காண்பிக்கப்படுவது தான். அது பி.சா.ஆ–1 ஆக குறியீடு செய்யப்படுகிறது**.

4) மேற்படி பாகப்பிரிவினையில் மருதகண்டருக்கு பூர்வீக சொத்துக்களில் 65 செண்டும், கிரயம் பெற்ற சொத்துக்களில் 3–1/2 ஏக்கர் நிலமும் பிரிந்தது. நான் அனிச்சம்பாளையம் கிராமத்தில் வசித்து வருகிறேன். நான் குடியிருக்கும் வீடு ஓட்டுவில்லை வீடு ஆகும். மேற்படி வீட்டின் கதவு எண்.27 ஆகும். மேற்படி வீட்டிற்கு வடக்கிலும், கிழக்கிலும், எல்லையம்மன் கோவில் உள்ளது. தென்புறத்தில் கிழமேல் பஞ்சாயத்து வீடு உள்ளது, மேற்கில் ஐயப்பன் வீடு உள்ளது. நான் தற்போது குடியிருக்கும் வீடு ஐயப்பன் மகன் 2ம் பிரதிவாதிக்கு பாத்தியப்பட்டது என்றால் சரியல்ல. மருதகண்டருக்கு பாகமாக ஒதுக்கப்பட்ட பூர்வீக சொத்து 65 செண்ட்டில் 35 செண்ட் என்னுடைய அனுபவத்தில் உள்ளதா என்றால் இல்லை.

5) மேற்படி 65 செண்ட் நிலம் விவசாயம் நிலம் ஆகும். மேற்படி சொத்து அனிச்சம்பாளையம் கிராமத்தில் உள்ளது. என் அப்பா எனக்கு வீடு சம்மந்தமாக ஒரு தான பத்திரமும், நிலம் சம்மந்தமாக மற்றொரு தான பத்திரமும் எழுதி கொடுத்தார். நான் வழக்கு தாக்கல்செய்யும் போது பிராதில்சொல்லியுள்ள

விபரங்கள் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். எனது பிராதில் எனக்கு 2 தான பத்திரங்கள் என்அப்பா எனக்கு எழுதிக்கொடுத்ததாக சொல்லவில்லை என்றால் சரியல்ல. மேற்படி இரண்டு தான பத்திரங்களும் ஒரே தேதியில் ஏற்பட்டது. மேற்படி பத்திரத்தில் என் அப்பாவிற்கு எப்படி பாத்தியம் என்று சொல்லியுள்ளார் என்றால், பாகக்கறார் பத்திரம் மூலம் பாத்தியம் என்று சொல்லியுள்ளார். மேற்படி தான பத்திரத்தில் அவருக்கு பாத்தியப்பட்ட சொத்தில் 1 ஏக்கர் 42–1/2 செண்ட் பொறுத்து எனக்கு எழுதிக்கொடுத்துள்ளார்.

6) மேற்படி பத்திரம் ஏற்பட்ட தேதியில் ஐயப்பனுக்கு அந்த சொத்தில் உரிமை இருந்ததா என்றால், இல்லை. மேற்படி தான பத்திரம் ஏற்பட்ட தேதியில் ஐயப் பனுக்கு சொத்தில் உரிமை இல்லை என்பதற்கான ஆவணங்கள் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. 1, 2 பிரதிவாதிகள் மருதகண்டர் பெயருக்கோ, அல்லது வேறு நபர் பெயருக்கோ விடுதலை பத்திரம் எழுதிக்கொத்துள்ளார்களா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. கண்ணியம்மாளுக்கும், மருதகண்டருக்கும் திருமணம் நடைபெற்றதற்கான ஆவணங்கள் எதுவும் இவ்வழக்கில் நான் தாக்கல் செய்யவில்லை. என் அப்பா என் பெயரில் எழுதிக்கொடுத்துள்ள இரண்டு தான பத்திரங்களும் 29.12.2004ம் தேதியில் இரண்டு பத்திரங்களின் மூலம் இரத்து செய்யப்பட்டுள்ளது என்றால், அந்த விபரம் தற்போது தான் எனக்கு தெரியும்.

7) எனக்கு தான செட்டில்மெண்ட் ஏற்பட்ட தேதியில் இருந்து தற்போது வரை எனக்கு தான பத்திரம் மூலம் எழுதி வைத்த சொத்துக்களின் பட்டாவை நான் என் பெயருக்கு மாற்ற வில்லை என்றால், 2003ல் பட்டாவை என் பெயரில் மாற்றியுள்ளேன். மேற்படி பட்டாவை என் பெயருக்கு மாற்றியதற்கான உத்தரவை இவ்வழக்கில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், தாக்கல் செய்துள்ளேன். எந்த பட்டா மாறுதல் உத்தரவையும் நான் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்துள்ள வா.சா.ஆ.2

கணிணி சிட்டாவில் 2003ல் பட்டா எனது பெயரில் மாற்றம் செய்யப்பட்டதற்கான குறிப்பு எதுவும் இல்லை என்றால் சரிதான்.

8) நான் ஜெகநாதன் என்பவருடன் கிரயம் ஒப்பந்தம் செய்து கொண்டதாக தாக்கல் செய்யப்பட்டுள்ள வா.சா.ஆ.7 ஆவணம் ஏற்பட்ட சமயம் அந்த சொத்து சம்மந்தப்பட்ட வில்லங்க சான்றை நான் பெற்று பார்த்தேனா என்றால், ஜெகநாதன் பார்த்தார். வா.சா.ஆ.7 ஆவணம் 2008 ம் ஆண்டு ஏற்படுத்தப்பட்டது. மேற்படி வில்லங்க சான்றிதழ் பார்த்தபின்பு என் தந்தை தான பத்திரத்தை ரத்து செய்துள்ளார் என்றும், அதனால் எப்படி என்னுடன் கிரய ஒப்பந்தம் ஏற்படுத்திக்கொள்ள முடியும், ஜெகநாதன் என்னிடம் கேட்டாரா என்றால், கேட்கவில்லை. ஜெகநாதான் பெற்ற வில்லக சான்றை நான் பார்க்கவில்லை. எனது மனைவியின் பெயர் சிவகாமி ஆகும். என் மனைவிக்கு மருதகண்டர் சொத்து எதுவும் எழுதிக்கொடுக்கவில்லை. மருதகண்டரின் சொத்துக்களில் என் மனைவிக்கு சொத்தில் எந்த உரிமையும் இல்லாததால், வா.சா.ஆ.7 ஆவணத்தில் அவர் ஏன் கையெழுத்து போட்டார் என்றால், சொத்து என் பெயரில் உள்ளதால் என் மனைவியும் கையெழுத்து போட்டார்.

9) என் மகனும், மகளும் வா.சா.ஆ.7 ஆ வணத்தில் ஏன் கையெழுத்து போடவில்லை என்றால், அவர்கள் அப்போது மேஜர் ஆகவில்லை. அவர்களை மைனர் என்று வா.சா.ஆ.7 ஆவணத்தில் குறிப்பிடவில்லை என்றால் சரிதான். என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.7ஆவணத்தில் என் பெயரில் 2003ம் ஆண்டு பட்டா ஏற்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. வா.சா.ஆ–7 ஆவணத்தில் எவ்வளவு காலத்தில் கிரயம் முடித்து கொள்ள வேண்டும் என்று குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், அது பற்றி எனக்கு தெரியாது. வா.சா.ஆ.8 கிரய ஒப்பந்த இரத்து பத்திரம் 2017ம் ஆண்டு ஏற்பட்டது. வா.சா.ஆ.8 ஆவணத்தில் என்ன காரணத்திற்கான இரத்து செய்யப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால், நான் கடனை திருப்பி கொடுத்துவிட்டதால் ரத்து செய்யப்பட்டது

என்று குறிப்பிடப்பட்டுள்ளது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.8 ஆவணத்தில் கடன் சம்மந்தமாக விபரங்கள் குறிப்பிடப்பட்டுள்ளதா என்றால், இல்லை. ஜெகநாதனுக்கு வச தி இல்லை என்றும், எனக்கும், எ ன் மனைவிக்கு இஷ்டம் இல்லை என்றும் காரணம் குறிப்பிட்டு வா.சா.ஆ.8 ஆவணம் இரத்து செய்யப்படுவ தாக குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

(மேற்கொண்டு குறுக்கு விசாரணைக்காக வழக்கு ஒத்திவைக்கப்படுகிறது)

Taken down by me in the open Court and read over to the witness and acknowledged by him /her to be Correct.

S NALINAKUMAR

Digitally signed by S NALINAKUMAR
Date: 2026.06.11 18:56:38 +0530

Sub Judge,
Paramathy